RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025

9842961596, 9384761596
ஹோட்டல் ஸ்ரீ பழனிஸ் சைவம்
HOTEL SREE PALANIS Veg
உணவு ஆர்டர் தேவைக்கு : 80980 97273
மேல்கரை மெயின் ரோடு - மானாமதுரை

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்

கார்த்திக் மருத்துவமனை
மனோ CT ஸ்கேன்
24 மணி நேர சேவை
சிவகங்கை

சிவகங்கை | மலர்-5 | இதழ்- 111 | ஏப்ரல்.28 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# மக்கள் தான் என் குடும்பம்; மேற்கு வங்க பிரசாரத்தில் மோடி உருக்கம்

கொல்கட்டா: ஏப்.28-

மேற்குவங்கத்தில் நேர்மையான ஆட்சியை மக்கள் விரும்புகின்றனர்; மக்கள் தான் என் குடும்பம் என இறுதிகட்ட தேர்தல் பிரசாரத்தில் பிரதமர் மோடி பேசுகையில் தெரிவித்தார்.

மேற்குவங்கத்தில் பராக்பூரில் இறுதிகட்ட பிரசாரத்தில் பிரதமர் மோடி பேசியதாவது: சுதந்திர போருக்கு வலிமை அளித்த பாரக்பூர் தான் மேற்குவங்க மாற்றத்துக்கான பாதையை அமைக்கிறது. அனைவரது மத்தியிலும் வாழ்வதில் தான் நான் மகிழ்ச்சியை காண்கிறேன்; நீங்களே எனது குடும்பம்.

மேற்குவங்கத்துக்கு சேவையாற்றுவதும், காப்பாற்றுவதும் வெறும் விதியல்ல, எனது கடமை. மேற்குவங்கத்தின் ஆளுமைகளிடம் இருந்து உத்வேகம், மக்களின் அன்பை பெற்று உள்ளேன். மாநிலம் முழுவதும் எதிரொலிக்கும் ஒரே வார்த்தை, மாற்றம் தேவை, பாஜ அரசு வேண்டும் என்பது தான்.

பதவியேற்பு விழாவுக்குஞ்.

நேர்மையான ஆட்சியை மக்கள் விரும்புகின்றனர். இதுவே மேற்குவங்கத்தில் கடைசி பிரசார நிகழ்வு. மே 4ம் தேதிக்கு பிறகு பாஜவின் பதவியேற்பு விழாவிற்கு திரும்புவேன். பாஜ ஆட்சி அமைக்கும்.



பாஜவின் பதவியேற்பு விழாவில் நான் நிச்சயம் கலந்துகொள்வேன் என்ற நம்பிக்கையுடன் திரும்பிச் செல்கிறேன். அது எனது உற்சாகத்தை மேலும் அதிகரிக்கிறது. நான் ஹெலிபேடில் இருந்து இங்கு வந்துகொண்டிருந்தேன். இரண்டு கிலோமீட்டர் நீளமுள்ள பாதை. இருபுறமும் மிகப்பெரிய கூட்டம் இருந்தது.

இரட்டை இன்ஜின் அரசு

ஆயிரக்கணக்கான மக்கள் வந்து என்னை வாழ்த்துவார்கள் என்பதை என்னால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை. ஆளும் திரிணமுல் காங்கிரஸ் ஆட்சியின் கீழ் மாநிலத்தில் தொழில்துறை நடவடிக்கைகள் குறைந்துள்ளது.

தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளது. எதிர்கால வளர்ச்சிக்கு திரிணமுல் காங்கிரஸ் அரசிடம் தெளிவான செயல் திட்டம் இல்லை. இரட்டை இன்ஜின் அரசு தேவை. மாநில அரசும் மத்திய அரசும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் மட்டுமே விரைவான வளர்ச்சி சாத்தியமாகும். திரிணமுல் காங்கிரஸின் ஆட்சி கலைக்கப்பட வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

5 உத்தரவாதங்கள்!

மேற்கு வங்கத்தில் பிரதமர் மோடி அளித்த ஐந்து உத்தரவாதங்கள் பின்வருமாறு:

* காலந்தவறாத அரசு வேலை ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

* தற்போதுள்ள அனைத்து அரசு வேலை காலிப் பணியிடங்களும் தாமதமின்றி நிரப்பப்படும் .

* திறமைக்கு ஏற்ற வேலை உருவாக்கி தரப்படும்.

* மேற்கு வங்கத்தில் உள்ள அரசு ஊழியர்கள் 7வது ஊதியக் குழுவின் கட்டமைப்பின் கீழ் பலன்களைப் பெறுவார்கள்.

* ஜிராம்ஜி கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் படி கிராமங்களில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

# மனைவிக்கு கடன் விஜய் வேட்புமனுவை ஆய்வு செய்யக் கோரிய வழக்கு: ஐகோர்ட் தள்ளுபடி

சென்னை: ஏப்.28-

தனது வேட்புமனுவில் மனைவிக்கு ரூ.12 கோடியே 60 லட்சம் ரூபாய் கடன் கொடுத்ததாக தவெக தலைவர் விஜய் குறிப்பிட்டுள்ளது குறித்து ஆய்வு செய்யக் கோரிய வழக்கை தள்ளுபடி செய்து, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் போட்டியிட்ட தவெக தலைவர் விஜய் தாக்கல் செய்த வேட்புமனுக்களில் 100 கோடி ரூபாய் வித்தியாசம் உள்ளது குறித்து வருமான வரித்துறை விசாரிக்கக் கோரி பெரம்பூர் தொகுதி வாக்காளர் தாக்கல் செய்த வழக்கு, ஜூன் மாதத்துக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், வேட்புமனுவில் பெருந்தொகையை மனைவி உள்ளிட்டோருக்கு கடனாக வழங்கியுள்ளதாக, விஜய் தனது வேட்புமனுவில் கூறியுள்ளது குறித்து ஆய்வு செய்யக் கோரி, மற்றொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பெரம்பூர் தொகுதி வாக்காளர் வெங்கடேஷ் தாக்கல் செய்த மனுவில், விவாகரத்து கோரி தவெக தலைவர் விஜய்யின் மனைவி சங்கீதா வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், வேட்புமனுவில் அவருக்கு 12 கோடியே 60 லட்சம் ரூபாய் கடன் கொடுத்துள்ளதாக கூறியுள்ளது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

வேட்புமனுவில் சொத்து விவரங்களை தெரிவிப்பது வெறும் சடங்கு அல்ல. அதில் உண்மை விவரங்களை மறைப்பது தேர்தல் நடைமுறையை மோசடி செய்வதை போன்றது எனவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. தனியார் கல்வி அறக்கட்டளைக்கு 20 கோடி ரூபாய் பணம் வழங்கியுள்ளது குறித்து வேட்புமனுவில் முறையாக எந்த விளக்கமும் அளிக்கவில்லை எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு, ஏற்கனவே இதே கோரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால், இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்க முடியாது எனக் கூறி, தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

# கழிவுநீர் தெருக்களில் வழிந்தோடி வருவதால் பொதுமக்கள் கடும் அவதி





சிவகங்கை, ஏப்.28-

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட 19ஆவது வார்டு கௌதமர் தெருவில், கால்வாய் அடைப்பு காரணமாக கழிவுநீர் தெருக்களில் வழிந்தோடி வருவதால் பொதுமக்கள் கடும் அவதியடைந்து வருகின்றனர்.கழிவுநீர் தேங்கி நிற்பதால் அப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுவதுடன், தொற்று நோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாக மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். குறிப்பாக குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் தினசரி இந்தக் கழிவுநீரைக் கடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.இந்த பிரச்சினை குறித்து நகராட்சி நிர்வாகத்திடம் பலமுறை புகார் அளித்தும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். மேலும், இதுகுறித்து பலமுறை நாளிதழ்களிலும் செய்தி வெளியான போதிலும், அதிகாரிகள் அலட்சியமாகவே இருந்து வருவது மக்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.“மக்கள் நலனில் நிர்வாகத்துக்கு அக்கறை உள்ளதா? மாவட்ட ஆட்சியர் இதை கண்டுகொள்வாரா?” என பொதுமக்கள் ஆதங்கத்துடன் கேள்வி எழுப்புகின்றனர்.தொற்று நோய் பரவும் முன்பே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து கால்வாயை சுத்தம் செய்து, மக்களின் சுகாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் ஒரே கோரிக்கையாக உள்ளது.

# சென்னையில் ஆட்டோ எல்பிஜி எரிவாயு தட்டுப்பாடு: 3 மணி நேரம் காத்திருக்கும் ஓட்டுநர்கள்

சென்னை: ஏப்.28-

சென்னையில் ஆட்டோ எல்பிஜி எரிவாயு கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஓட்டுநர்கள் 3 மணி நேரம் வரை வரிசையில் காத்திருந்து, நிரப்பி செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றத்தால், காஸ் சிலிண்டர், ஆட்டோ எல்பிஜி எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதை சமாளிக்க மாற்று வழிகளை மத்திய அரசு எடுத்து வருகிறது. இதற்கிடையில், வாகனங்ளுக்கான எல்பிஜி, சிஎன்ஜி எரிவாயு கிடைக்காததால், ஓட்டுநர்கள் கடும் சிரமத்தை சந்திக்கின்றனர்.



சென்னை நகரில் பல்லாயிரக் கணக்கான ஆட்டோக்கள், கால் டாக்சிகள் எல்பிஜி மற்றும் சிஎன்ஜி எரிவாயுவை பயன்படுத்துகின்றன. தற்போது எல்பிஜி எரிவாயு தட்டுப்பாட்டால், பல்வேறு தனியார் ஆட்டோ எரிவாயு நிலையங்களில் மூடப்பட்டுள்ளன.

சைதாப்பேட்டை, கிண்டி. சிஐடி நகர் உள்பட சில இடங்களில் திறக்கப்பட்டுள்ள எரிவாயு நிரப்பும் நிலையங்களில் நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்திருந்து நிரப்பி செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

உதாரணமாக, சிஐடி நகரில் 2 கி.மீ. தூரத்துக்கு 3 மணி நேரமாக நீண்ட வரிசையில் காத்திருந்து, காஸை நிரப்பி செல்லும் பரிதாப நிலைக்கு ஆட்டோ ஓட்டுநர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

சென்னையில் ஆட்டோ, கார் ஆகியவற்றுக்கு நிரப்பப்படும் காஸ் நிரப்பும் நிலையங்கள் மூடப்பட்டுள்ளதால், ஆட்டோ ஓட்டுநர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளன. இது குறித்து, ஆட்டோ ஓட்டுநர்கள் கூறுகையில், “ஏற்கனவே ஆட்டோ எரிவாயு தட்டுப்பாட்டால், ஓட்டுநர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது, பெரும்பாலான நிலையங்களில் எல்பிஜி எரிவாயு கிடைக்காததால், ஓட்டுநர்களுக்கு மன உளைச்சல் ஏற்பட்டு, உடல் நலக் குறைவு ஏற்படுகிறது. இப்பிரச்சினைக்கு மத்திய அரசு தீர்வு காண வேண்டும்” என்றனர்.

இது குறித்து, இந்திய எண்ணெய் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: இந்திய எண்ணெய் நிறுவனங்களில் போதுமான அளவு எரிவாயு கையிருப்பு உள்ளது. எண்ணெய் நிறுவனங்களின் கீழ் செயல்படும் எரிவாயு நிரப்பும் மையங்களுக்கும் போதுமான அளவு காஸ் வழங்கப்படுகிறது.

வாகன ஓட்டிகள் தங்களுக்குரிய வாகனங்களில் போதுமான அளவு காஸ் நிரப்பி கொள்ளலாம். ஆட்டோக்கள் நீண்ட வரிசையில் காத்துக்கிடப்பதற்கு காரணம் பல தனியார் காஸ் நிரப்பும் நிலையங்களில், எரிவாயு இல்லாமல் இருப்பதுதான்.

அத்துடன், காஸ் தட்டுப்பாடு காரணமாக, ஒருசில காஸ் நிரப்பும் மையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இதனால், ஒட்டுமொத்தமாக அனைவரும் இந்திய எண்ணெய் நிறுவனங்கள் நடத்தும் மையங்களை தேடி ஒரே நேரத்தில் செல்வதால், நீண்ட வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# ரயில்களில் மாற்றுத் திறனாளிகள் சிறப்பு பெட்டிகளில் பயணிக்க சலுகை

சென்னை: ஏப்.28-

ரயில்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பெட்டிகளில் பயணிக்க, இனி, யுடிஐடி என்னும் தேசிய தனித்துவமான அடையாள அட்டை பயன்படுத்தலாம் என, ரயில்வே வாரியம் அறிவித்துள்ளது.

இது குறித்து, ரயில்வே வாரியம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்திய ரயில்வே வாரியம் சார்பில் இயக்கப்படும், ஒவ்வொரு சாதாரண மற்றும் விரைவு ரயில்களில், மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு பெட்டிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பயணிக்க, ரயில்வே வாரியம் வழங்கும் கட்டண சலுகை, பாஸ் பெற்றவர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.



இதர மாற்றுத் திறனாளிகள், முன் பதிவில்லாத சாதாரண பெட்டிகளில் கட்டணம் செலுத்தி பயணித்து வந்தனர். இந்நிலையில், தேசிய மாற்றுத் திறனாளி நலத்துறை வாயிலாக, யுடிஐடி என்னும் தனித்துவமான அடையாள அட்டை பெற்ற அனைவரும், இப்பெட்டிகளில் பயணிக்கலாம்.

ரயில்வே வாரியத்தின் கட்டண சலுகை பாஸ் பெற்றவர்களும் இப்பெட்டிகளில் பயணிக்கலாம். அத்தகைய பாஸ் பெறாத மாற்றுத் திறனாளிகள், கட்டண டிக்கெட் பெற்று, தங்கள் யுடிஐடி அட்டையை காட்டி, இந்த சிறப்பு பெட்டிகளில் பயணிக்கலாம்.

அனுமதியின்றி இப்பெட்டியில் பயணிக்கும் இதர பயணிகள் மீது, ரயில்வே சட்டத்தின் கீழ், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பம்மதுகுளம் ஊராட்சி கோணிமேடு ஸ்ரீ முனுசாமி ஆலயத்தில் சித்திரை திருவிழா



மாதவரம், ஏப். 28-

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சி கோணிமேடு கிராமம் எல்லையம்மன் கோயில் தெருவில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ முனுசாமி ஆலயத்தில் 8ம் ஆண்டு சித்திரை திருவிழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் பதிவிளக்கு பூஜை மற்றும் மூலவர் சுவாமிக்கு பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்திலிருந்து பம்பை உடுக்கையுடன் தாய்மார்கள் தங்களது சிரசியில் பால்குடம் எடுத்து வந்து அருள்மிகு ஸ்ரீ முனுசாமி சுவாமிக்கு பக்தர்கள் உலக மக்கள் நன்மைகள் வேண்டியும் மற்றும் தங்களது நேர்த்தி கடனை பூர்த்தி அடைய வேண்டியும் தங்களது திருகரங்களால் பால் அபிஷேகம் செய்தனர். இதனைத் தொடர்ந்து மூலவருக்கு வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. மேலும் பொங்கல் வைத்தல், கும்பம் படையல்பூஜை நடைபெற்றது. இத்திருவிழாவிற்கு அருள்மிகு ஸ்ரீ முனுசாமி குலதெய்வம் வழிபாடு செய்யும் குடும்பத்தினர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

# தேனி போடி இடையே அரசு பஸ்களில்ரூ.11க்கு பதில் ரூ.15 கட்டணம் ரூ.16,004 இழப்பீடுக்கு உத்தரவு





போடி ஏப். 28-

தேனியில் இருந்து போடிக்கு பஸ்சில் அரசு நிர்ண யித்த ரூ.11 கட்டணத் திற்கு பதில், ரூ.15 வசூலித்தது ஆர்டிஐ மூலம் தகவல் பெற்று, வழக்கு தொடர்ந்ததில் இழப்பீடு தொகையாக ரூ.16,004 வழங்க உத்தர விடப்பட்டுள்ளது. தேனி மாவட்டம் மேலச்சொக்கநாதபுரம் பகுதியை சேர்ந்த சமூக ஆர்வலர் ராமகிருஷ்ணன். இவர் தேனியி லிருந்து போடிக்கு பஸ் சில் பயணித்தபோது ரூ.15 கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. இவர் தகவல் அறியும் 'உரிமை சட்டம் மூலம் விசாரித்ததில், தேனி யிலிருந்து போடிக்கு அரசு நிர்ணயம் செய் துள்ள காப்பீடு, டோல்உள்பட கட்டணம் ரூ.11 மட்டும்தான் எனத் தெரிந்தது. ஆனால் கட்டணமாக ரூ.15 பெற்று வருவது தெரிந்தது. அதாவது, எக்ஸ்பிரஸ் கட்டணம் பெறப்பட்டுள்ளது. எக்ஸ்பிரஸ் பஸ்சில் ஒரு நிறுத்தத்திற்கும் மற்றொரு நிறுத்தத் திற்கும் இடைப்பட்டதூரம் 23 கிலோ மீட்டர் இருக்க வேண்டும் என்று மோட்டார் வாகன சட்டம் கூறுகின்றது.

இது குறித்து கலெக்டர், போலீசாரிடம் மனு கொடுத்த ராமகிருஷ்ணன், நீதிமன்றத்தையும் அணுகியுள்ளார். தேன மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் சேவை குறைபாடு, முறையற்ற வணிகம் நடந்ததற் கான இழப்பீடு கோரி கடந்த ஆண்டு நவ. 28ல் வழக்கு தாக்கல் செய்தார். கடந்த ஏப்.16ல் கூடுதலாக பயண கட்டணம் பெற்றதை உறுதி செய்து, அரசு நிர்ணயம் செய்துள்ள பயண கட்டணம் ரூ.11 என்பதையும் உறுதி படுத்திய நீதிமன்றம், ராமகிருஷ்ணனிடம் ரூ.15 கட்டணம் பெற்ற தில், பயண கட்டணம் ரூ.11 போக, கூடுதல் கட்டணமான ரூ. 4ஐ திருப்பிக் கொடுக்க வும், வழக்கு செலவும் சேர்த்து மொத்தமாக ரூ.16,004ஐ ஒரு மாதத் திற்குள் வழங்கவும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## 2021 சட்டசபை தேர்தலை ஒப்பிடுகையில் 6 தொகுதிகளிலும் கணிசமாக உயர்ந்த வாக்குப்பதிவு

# 2-வது முறையாக தொடர்ந்து வேப்பனப்பள்ளியில் அதிக வாக்குகள் பதிவு

கிருஷ்ணகிரி,ஏப்.28-

2021 சட்டசபை தேர்தலை ஒப்பிடுகையில் 6 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு கணிசமாக உயர்ந்துள்ளது.சட்டசபை தேர்தல்தமிழக சட்டசபை தேர்தல் கடந்த 23-ந் தேதி நடந்தது. 5 ஆண்டுகளுக்கு முன்பு தமிழக சட்டசபைக்கு தேர்தல் 2021-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ந் தேதி நடந்தது. அப்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 தொகுதிகளில் மொத்தம் 77.4 சதவீதம் வாக்குகள் பதிவானது. ஆனால் இந்த முறை 85.42 சதவீதம் வாக்குகள் பதிவாகி உள்ளன. அதாவது 8 சதவீதம் வாக்குப்பதிவு உயர்ந்துள்ளது.தொகுதி வாரியாக கணக்கிட்டில் ஊத்தங்கரை தொகுதியில் கடந்த 2021-ல் 78.7 சதவீதம் வாக்குப்பதிவு ஆன நிலையில் இந்த முறை 86.03 சதவீதம் பதிவாகி உள்ளது. அதாவது 8 சதவீதம் உயர்ந்துள்ளது. பர்கூர் தொகுதியில் 2021-ல் 79.1 சதவீதம் பதிவான நிலையில் இந்த முறை 87.94 சதவீதம் பதிவாகி உள்ளது. இதன் மூலம் 9 சதவீதம் வரையில் வாக்குப்பதிவு உயர்ந்துள்ளது.

வேப்பனப்பள்ளி தொகு திகிருஷ்ணகிரி தொகுதியில் கடந்த முறை (2021) 78.5 சதவீதம் பதிவான நிலையில் இந்த முறை 84.79 சதவீதம் பதிவாகி உள்ளது. ஏறத்தாழ 6 சதவீதம் அளவுக்கு வாக்குப்பதிவு உயர்ந்துள்ளது.

வேப்பனப்பள்ளி தொகுதியில் கடந்த முறை (2021) 81.3 சதவீதம் பதிவான நிலையில் இந்த முறை 89.79 சதவீதம் பதிவாகி உள்ளது. 8 சதவீதம் அளவுக்கு வாக்குப்பதிவு உயர்ந்துள்ளது. ஒசூர் தொகுதியில் கடந்த முறை 70.1 சதவீதம் பதிவான நிலையில் இந்த முறை 80.34 சதவீதம் பதிவாகி உள்ளது. 10 சதவீதம் வாக்குப்பதிவு உயர்ந்துள்ளது. தளி தொகுதியில் கடந்த முறை (2021) 77.1 சதவீதம் பதிவான நிலையில் இந்த முறை 85.78 சதவீதம் உயர்ந்துள்ளது. ஏறத்தாழ 8 சதவீதம் வரை வாக்குகள் கூடுதலாக பதிவாகி உள்ளன.கடந்த தேர்தலில் (2021) வேப்பனப்பள்ளி தொகுதியே அதிக வாக்குகள் பதிவாகி இருந்தது. இந்த முறையும் வேப்பனப்பள்ளி தொகுதியே அதிக வாக்குகள் பதிவாகி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நீலகிரி மாவட்டம் கூடலூரில் வெப்ப சலன விழிப்புணர்வு மற்றும் இலவச மருத்துவ முகாம்




கூடலூர் ஏப்.28-

நீலகிரி மாவட்டம் கூடலூர் திவ்யா தட்டச்சு பயிற்சி மையத்தில் வெப்ப சலன பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் இலவச பொது மருத்துவம் மற்றும் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது.

கூடலூர் நுகர்வோர் மனித வள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், இந்திய செஞ்சிலுவை சங்க நடமாடும் மருத்துவக் குழு, திவ்யா தட்டச்சு பயிற்சி மையம், கார்மேல் ஷாலோம் சாரிட்டபிள் டிரஸ்ட் சேரம்பாடி மற்றும் ஷாலோம் சாரிட்டபிள் டிரஸ்ட் பந்தலூர் ஆகியோர் இணைந்து நடத்திய இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, இலவச மருத்துவ மற்றும் கண் பரிசோதனை முகாமிற்கு திவ்யா தட்டச்சு பயிற்சி மைய முதல்வர் எபினேசர் தலைமை தாங்கினார். கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம், கூடலூர் ரெப்கோ வங்கி (மைக்ரோ பைனான்ஸ்) கூடலூர் கிளை மேலாளர் சுஜாதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கார்மேல் ஷாலோம் சாரிட்டபிள் டிரஸ்ட் இயக்குனர் தனராஜ் முகாமை துவக்கி வைத்தார்நிகழ்ச்சியில் செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு மருத்துவர் ஜேன் மார்டினெஸ் பேசும்போது வெயிலின் தாக்கத்தால் தலைசுற்றல், அதிக வியர்வை, வாந்தி, மயக்கம், சிறுநீர் மஞ்சளாக போவது உள்ளிட்ட பிரச்சனைகள் ஏற்படும். மிகவும் சோர்வாக இருக்கும் போது உடனே நிழலுக்கு சென்று ஓய்வு எடுக்கவும், தண்ணீர் அல்லது பலரசங்கள் குடித்து உடலில் நீர் பற்றாக்குறையை போக்க வேண்டும். குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணிகள் வெயிலில் அதிகம் பாதிக்கப்படுவார்கள் அவர்களை அதிகம் பகல் நேரங்களில் வெளியே வருவதை தவிர்க்க வேண்டும் என்றார்.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசும்போது ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை ஒரு டம்ளர் தண்ணீர் அல்லது மோர், இளநீர், எலுமிச்சை சாறு குடிக்கலாம், அதுபோல வெளிர் நிற, இறுக்கமில்லாத பருத்தி ஆடைகள் அணியுங்கள். கருப்பு மற்றும் அடர் நிறங்கள் சூட்டினை அதிகப்படுத்தும். எண்ணெய், காரம் அதிகம் உள்ள உணவுகளை குறைத்து கொண்டு நீர்சத்து நிறைந்த உணவுகளை அதிகம் எடுத்து கொள்ள வேண்டும் என்றார். தொடர்ந்து செஞ்சிலுவை சங்க மருத்துவ குழுவினர் மருத்துவர் ஜேன் மார்டினெஸ் தலைமையில் மருந்தாளுநர் நவீன், செவிலியர் சுமதி, நிர்வாக அலுவலர் லாய்சன் உள்ளிட்ட குழுவினர் ரத்த அழுத்தம், ரத்த சர்க்கரை பரிசோதனை மற்றும் பொது மருத்துவ சிகிச்சைகள் அளித்தனர். தேவை உள்ளவர்களுக்கு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. அதுபோல கண் தொழில்நுட்ப உதவியாளர் பாக்யா கிட்டப்பார்வை, தூரப்பார்வை பரிசோதனை செய்து தேவைபட்டவர்களுக்கு இலவச கண்ணாடிகள் வழங்கினார்.முகாமில் பயிற்சி மைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.




■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் தொகை கணக்கெடுப்பு (20262027) குறித்து இரண்டு நாள் பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் துவக்கி வைத்து உரையாற்றினார். உடன் மக்கள் தொகை கணக்கெடுப்பு இணை இயக்குநர் வாசுதேவன், உதவி இயக்குநர் சஜிலால், புள்ளியியல் ஆய்வாளர் கட்டவெங்கண்ணா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கிருஷ்ணன் மற்றும் பேரிடர் மேலாண்மை வட்டாட்சியர் வெங்கடேசன் ஆகியோர் உள்ளனர்.

# 6 சட்டசபை தொகுதிகளில்46.99 சதவீத திருநங்கைகள் வாக்களிப்பு

கிருஷ்ணகிரி,ஏப்.28-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரை (தனி), பர்கூர், கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி, ஓசூர், தளி ஆகிய 6 சட்டசபை தொகுதிகள் உள்ளன. இதில் திருநங்கைகள் 266 பேர் வாக்காளர்களாக உள்ளனர். நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் ஊத்தங்கரை தொகுதியில் உள்ள 41 திருநங்கைகளில் 8 பேரும், பர்கூரில் உள்ள 17 பேரில் 9 பேரும், கிருஷ்ணகிரி தொகுதியில் உள்ள 61 பேரில் 42 பேரும், வேப்பனப்பள்ளி தொகுதியில் உள்ள 38 பேரில் 20 பேரும், ஓசூர் தொகுதியில் உள்ள 72 பேரில் 29 பேரும், தளி தொகுதியில் உள்ள 37 பேரில் 17 பேரும் என மொத்தம் 125 பேர் வாக்களித்துள்ளனர். இது 46.99 சதவீதம் ஆகும்.

# திருவண்ணாமலை மாவட்டத்தில் சிறந்த சுற்றுலாதலமான சாத்தனூர் அணையில் திரண்ட பொதுமக்கள்

தண்டராம்பட்டு, ஏப்.28-

திருவண்ணாமலை மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற சாத்தனூர் அணையில் சுற்றுலா பயணிகள் நேற்று திரண்டனர். அப்போது பூங்காக்கள், முதலை பண்ணையை சுற்றி பார்த்து மகிழ்ந்தனர்.

திருவண்ணாமலை மாவட்டத்திலேயே மிகவும் பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தலமாக விளங்குவது சாத்தனூர் அணையாகும். பொன்விழா கண்ட இந்த அணை 119 அடி உயரம் கொண்டது. இந்த அணையில் எம்ஜிஆர் சிவாஜி ரஜினி உள்ளிட்ட முன்னணி திரை நட்சத்திரங்கள் வைத்து பல்வேறு திரைப்படங்கள் இந்த சாத்தனூர் அணையில் எடுக்கப்பட்டது.

அணை முழுஅளவு நீர் எட்டியதனால் விவசாய பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். இதனால் விவசாய பாசனத்திற்காக தென்பெண்ணை ஆறு வலது புறம், இடதுபுறம், திருக்கோவிலூர் பழைய ஆயகட்டு பகுதிகளுக்கு வினாடிக்கு 550 கனஅடி தண்ணீர் நீர் மின்சாரம் தயாரிக்க கூடிய வழியாக திறந்து விடப்பட்டு வருகிறது.

இதனால் நீர் மின்சாரம் 7 எம்எம் மின்சாரம் எடுக்கப்பட்டு சுற்றி உள்ள பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்து விவசாயத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டதனால் சாத்தனூர் அணை 86.35அடியாக நீர் மட்டும் குறைந்துள்ளது.

பள்ளி கல்லூரி களுக்கு விடுமுறை விடப்ப ட்டதனால் விடுமுறை தினம் என்பதாலும் சாத்தனூர் அணையில் உள்ள சிறுவர் பூங்கா, டைனோசர் பார்க், அறிவியல் பார்க், படகுகுளம், நீச்சல் குளம், வீரமங்கை பார்க், அறிவியல் பார், முயல் கூண்டு பறவைகள் கூண்டு 11 கண் மதகுப்பகுதி முதலைப்பண்ணை உள்ளிட்ட இடங்களை சுற்றிப் பார்த்து சென்றனர். சாத்தனூர் அணையில் இருந்து பிடிக்கப்படும் மீன் பொதுமக்களுக்கு முதல் ரகம் ரூ.175க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதனை வாங்கி சுற்றுலா பயணங்கள் அங்கே சமைத்து சாப்பிட்டு பொழுதை கழித்து சென்றனர். மேலும் கடும் வெயிலில் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் விவசாய பாசனத்திற்காக திறந்து விடப்பட்ட தண்ணீரில் இளைஞர்கள், பெண்கள் குளித்து மகிழ்ந்தனர்.

# எரிவாயு சிலிண்டர் விநியோகம் காலஅவகாசம் குறைக்க கோரிக்கை

கூடலூர் ஏப். 28-

லகிரி மாவட்டத்தில் விறகு பொறுக்க செல்லும்போது வனவிலங்கு தாக்குதல் ஏற்படுவதால் பொதுமக்கள் விறகு சேகரிக்க சிரமம் மற்றும் எரிவாயு சிலிண்டர் கிடைக்காமல் அவதி படுகின்றனர். எனவே எரிவாயு சிலிண்டர்கள் விநியோக கால அவகாசம் குறைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் பாரத பிரதமருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது. நீலகிரி மாவட்டத்தை பொறுத்தவரை அதிக வனப்பகுதி, தேயிலைத் தோட்டப் பகுதியாக உள்ளது இங்கு பெரும்பான்மையாக தோட்ட தொழிலாளர்கள், கூலி தொழிலாளர்கள் மற்றும் பழங்குடி மக்கள்தான் என அடித்தட்ட மக்கள்தான் அதிகம் வசிக்கின்றனர். நீலகிரி மாவட்டத்தின் உள்ள அடர்ந்த காடுகள் மற்றும் தேயிலைத் தோட்டங்களில் யானை, புலி, சிறுத்தை, கரடி, காட்டு எருமை உள்ளிட்ட வனவிலங்குகளின் நடமாட்டம் அதிகரித்து உள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் (20152025) தமிழ்நாட்டில் வனவிலங்கு தாக்குதல்களால் சுமார் 700 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இதில் நீலகிரி மாவட்டம் முக்கியப் பங்கு வகிக்கிறது. குறிப்பாக கூடலூர் பகுதியில் யானை மனித மோதல் அதிகம் காணப்படுகிறது. இதன் காரணமாக பொதுமக்கள் காட்டுக்குள் சென்று விறகு சேகரிப்பது மிகவும் ஆபத்தாக உள்ளதால் பல முறை வனவிலங்கு தாக்குதல்கள், உயிரிழப்புகள் மற்றும் பொருட்சேதங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, பெரும்பாலான குடும்பங்கள் விறகை நம்பி சமையல் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இதனால் நீலகிரியில் தற்போது சுமார் 1.50 லட்சம் குடும்பங்கள் எரிவாயு சிலிண்டர்களை நம்பியே சமையல் செய்து வரும் நிலையே உள்ளது. தற்போது சமீபத்திய மத்திய அரசு உத்தரவின்படி கிராமப்புறங்களில் இடைவெளி நீட்டிக்கப்பட்டுள்ளதால் எரிவாயு சிலிண்டர் விநியோகம் 45 நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே செய்யப்படுகிறது. 14.2 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் சராசரியாக 25 முதல் 30 நாட்கள் வரைதான் ஒரு சாதாரண குடும்பத்துக்கு நீடிக்கும். 45 நாட்கள் இடைவெளி காரணமாக, கிராமப்புறங்களை சேர்ந்த சுமார் 1 ஒரு லட்ச எரிவாயு இணைப்பு பெற்ற குடும்பங்கள் 15 முதல் 20 நாட்கள் வரை சமையல் செய்ய இயலாமல் தவிக்கின்றனர்.

இதனால் சிறு குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணிகள் மற்றும் நோயாளிகளுக்கு உணவு தயாரிப்பதில் பெரும் சிரமம் ஏற்படுகின்றது.

குழந்தை பாலூட்டும் தாய்மார்கள், மருத்துவத் தேவைகளுக்கு சூடான நீர், மருந்து கொதிக்க வைத்தல் உள்ளிட்டவை மேற்கொள்ள அவதிப்படுகின்றனர்.தினசரி கூலி வேலை செய்யும் மக்களின் அன்றாட வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்படுகிறது. சில சமயங்களில் மக்கள் விறகு சேகரிக்க முயற்சி செய்யும்போது வனவிலங்கு தாக்குதலுக்கு ஆளாகின்றனர். விறகு சேகரிக்க சென்று அனுமாபுரம், ஓவேலி உள்ளிட்ட பகுதிகளில் இந்த 2026 ஏப்ரல் மாதத்தில் மட்டும் 2 உயிர்பலி ஏற்பட்டுள்ளது குறிப்பிடதக்கது.

இப்பிரச்சினை நீண்ட நாட்களாக தொடர்வதால், வனப்பகுதி மக்களின் அடிப்படை உரிமையான உணவு உரிமை பாதிக்கப்படுகிறது.

எனவே நீலகிரி மாவட்ட வனப்பகுதி, மலைப்பகுதிகளை ஒட்டி வாழ்வதாலும் மற்றும் பழங்குடி கிராமங்களை “சிறப்பு வகைப்பாடு” (Special Category / Difficult / Forest / Tribal Areas) என்று அறிவித்து, வனவிலங்கு தொல்லை காரணமாக விறகு சேகரிக்க முடியாத நிலை) கருத்தில் கொண்டு, மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்திடம் சிறப்பு ஒதுக்கீடு / விதிவிலக்கு வழங்கி நீலகிரி மாவட்டத்திற்கு எரிவாயு சிலிண்டர் விநியோக இடைவெளியை 25 நாட்களுக்கு ஒருமுறை ஆக குறைக்க வேண்டும்.

மேலும் சிலிண்டர் விநியோகத்தை விரைவுபடுத்தவும், போதுமான அளவில் சிலிண்டர்கள் கிடைக்க ஏற்பாடு செய்யவும் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு அந்த மனுவில்

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் கூறியுள்ளார்.




■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னனு வாக்கு பதிவு இயந்திரங்கள், கிருஷ்ணகிரி அரசு பல்தொழில்நுட்ப கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளதையடுத்து பாதுகாப்பு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் பர்கூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் அபிநயா உள்ளார்.

# கிருஷ்ணகிரி: வறட்சியால் கிராமங்களுக்கு வரும் காட்டு யானைகள் - பொதுமக்கள் அச்சம்

கிருஷ்ணகிரி,ஏப். 28-

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி அருகே உள்ள கொங்கனப்பள்ளி மற்றும் மகாராஜகடை வனப்பகுதிகளில் நிலவும் கடும் வறட்சி காரணமாக, காட்டு யானைகள் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகும் சம்பவங்கள் அதிகரித்து, பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.இந்த பகுதிகளில் கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக 10க்கும் மேற்பட்ட யானைகள் முகாமிட்டு வருகின்றன. அவை அவ்வப்போது வனப்பகுதியை விட்டு வெளியேறி, அருகிலுள்ள விவசாய நிலங்களில் நெல்,



வாழை, தக்காளி, மா, பலா உள்ளிட்ட பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன.

வனத்துறையினர் பலமுறை யானைகளை அடர்வனப்பகுதிக்குள் விரட்ட முயற்சி செய்தும், அவை மீண்டும் திரும்பி வருவது தொடர்கிறது. கடந்த சில நாட்களாக வறட்சி தீவிரமடைந்ததால், யானைகள் உணவு மற்றும் தண்ணீர் தேடி கிராமங்களுக்குள் அதிகமாக நுழைந்து வருகின்றன. இதனால் கொங்கனப்பள்ளி, சிகரமாகனப்பள்ளி, கே.கொத்தூர், பூதிமுட்லு, நேரலகிரி, கொல்லப்பள்ளி, தமாண்டரப்பள்ளி, நாரலப்பள்ளி உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் மக்கள் இரவு நேரங்களில் டார்ச் லைட்களுடன் விழிப்புடன் இருந்து யானைகளை விரட்டும் நிலை ஏற்பட்டுள்ளது. வனத்துறையினர் பட்டாசு வெடித்து யானைகளை விரட்டும் நடவடிக்கைகள் எடுத்தாலும், அவை தற்காலிகமாக மட்டுமே பயனளிக்கின்றன. மீண்டும் மீண்டும் யானைகள் கிராமங்களை நோக்கி திரும்பி வருகின்றன. இதுகுறித்து உள்ளூர் மக்கள் கூறுகையில், வனப்பகுதிகளில் தண்ணீர் மற்றும் உணவு பற்றாக்குறை காரணமாகவே யானைகள் குடியிருப்பு பகுதிகளுக்கு வருவதாக தெரிவித்தனர். எனவே,வனப்பகுதிகளில் தண்ணீர் தொட்டிகள் மற்றும் உணவு ஏற்பாடு செய்ய வேண்டும்யானைகள் ஊருக்குள் நுழையாதவாறு நிரந்தர தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்சுமார் 20 கி.மீ தூரத்திற்கு மின்வேலி மற்றும் அகழி அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.விவசாயிகளின் வாழ்க்கை பாதிப்பு, பாதுகாப்பு அச்சம் ஆகியவை அதிகரித்துள்ள நிலையில், நிரந்தர தீர்வு தேவை என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில்100 டிகிரியை தாண்டி கொளுத்திய வெயிலால் மக்கள் அவதி

## 30-ந் தேதி கன மழைக்கு வாய்ப்பு என தகவல்

கிருஷ்ணகிரி,ஏப்.28-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 100 டிகிரியை தாண்டி கொளுத்திய வெயிலால் மக்கள் கடும் அவதிக்குள்ளானார்கள். வருகிற 30-ந் தேதி கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை மையம் அறிவித்துள்ளது.

கொளுத்திய வெயில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோடை வெயில் சுட்டெரித்து வருகிறது. இந்த மாத தொடக்கம் முதல் 100 டிகரியை தாண்டி வெயில் அடித்து வருகிறது. இதனால் பகலில் மக்கள் வெளியே செல்ல முடியாமல் சிரமப்படுகிறார்கள். மாலை 5 மணிக்கு மேலே பொதுமக்கள் கூட்டத்தை சாலையில் பார்க்க முடிகிறது. நேற்றும் 100 டிகிரியை தாண்டி வெயில் அடித்ததால் மக்கள் அவதிக்குள்ளானார்கள். இதனால் நுங்கு, இளநீர், ஜூஸ் விற்பனை அதிகமாக காணப்பட்டது.கன மழைக்கு வாய்ப்புஇதனிடையே வானிலை மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் வருகிற 30-ந் தேதி (வியாழக்கிழமை) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.அதே போல 1, 2-ந் தேதிகளிலும் இடி-மின்னலுடன் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மழைபெய்ய வாய்ப்புஉள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# எஸ்ஐஆர் குற்றச்சாட்டுகளுக்கு இடையே மே. வங்கத்தில் முஸ்லிம்கள் அதிக அளவில் வாக்குப்பதிவு

கொல்கத்தா, ஏப்.28-

போலி வாக்காளர்களை நீக்குவதற்காக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் முஸ்லிம்களின் வாக்குரிமை பறிக்கப்படுவதாக மேற்கு வங்கம், பிஹார் மற்றும் உத்தரப் பிரதேசத்தில் பரவலான குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

மேற்கு வங்கத்தில், சுமார் 91 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டன. இவர்களில் சுமார் 63% பேர் இந்துக்கள் (சுமார் 57.47 லட்சம்), 34% பேர் முஸ்லிம்கள் (சுமார் 31.1 லட்சம்). இந்த நீக்கங்கள் வழக்கமான தூய்மைப்படுத்தும் பணியின் ஒரு பகுதி என்று தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கூறினார்.

எஸ்ஐஆர் பணியின் போது முஸ்லிம்கள் அதிகம் நீக்கப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. இதை நிராகரித்த தேர்தல் ஆணையம் இறந்த அல்லது இரட்டைப் பதிவுகளை நீக்கி வாக்காளர் பட்டியலைச் செம்மைப் படுத்தும் அரசியலமைப்பு நடவடிக்கைதான் எஸ்ஐஆர் என்று கூறியது. ஊடுருவல்காரர்களை தடுப்பதற்கான வழிதான் எஸ்ஐஆர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய ஜனநாயகத் தேர்தல்களின் நேர்மையைக் குலைக்கும் நோக்கில் நடத்தப்படும் விரிவான வாக்குத் திருட்டு திட்டத்தின் ஒரு பகுதியே எஸ்ஐஆர் என்று மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த அமித் ஷா, ''கண்டறிதல், நீக்குதல் மற்றும் நாடு கடத்துதல்'' என்ற கொள்கையின் மூலம் பாஜக ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாகக் கூறினார். இதில் நாடு கடத்துதல் என்ற அம்சம் முஸ்லிம்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு வங்கத்தில் கடந்த 23ம் தேதி 16 மாவட்டங்களில் உள்ள 152 தொகுதிகளில் முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் 54 தொகுதிகளில் முஸ்லிம்களின் மக்கள் தொகை கணிசமாக உள்ளது. இங்கு கடந்த 2021ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலை விட பல தொகுதிகளில் வாக்குப்பதிவு கடுமையாக அதிகரித்துள்ளது. எஸ்ஜஆர் நடவடிக்கையின்போது அதிக நீக்கங்கள் செய்யப்பட்ட முர்ஷிதாபாத் மற்றும் மால்டா மாவட்டங்களில் வாக்குப்பதிவு 90 சதவீதத்தை தாண்டியது. வாக்காளர் பட்டியல் திருத்தக் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில், மேற்குவங்கத்தில் முஸ்லிம் வாக்காளர்கள் அதிகளவில் வாக்களித்துள்ளனர்.




# ஏப்.30 முதல் மே 2 வரை நீலகிரி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு

சென்னை, ஏப்.28-

தமிழகத்தில் நாளை முதல் மே 2ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. ஏப்.30 முதல் மே 2 வரை சில மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மத்திய பிரதேசத்தின் மத்திய பகுதிகள் முதல் குமரிக் கடல் வரை விதர்பா, உள் கர்நாடகா, ராயலசீமா மற்றும் தமிழகம் வழியாக, சுமார் 900 மீட்டர் உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (ஏப்.28) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், நாளை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஏப்.30 முதல் மே 2ம் தேதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 3ம் தேதி ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் 30ம் தேதி நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும், மே 1, 2 தேதிகளில் நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரியில் நாளை முதல் மே 1ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் அளவு வரை அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பஞ்சாப் போலீஸ் பாதுகாப்பு வாபஸ்: ஹர்பஜன் சிங் எம்.பி.க்கு சிஆர்பிஎப் வீரர்கள் பாதுகாப்பு

சண்டிகர், ஏப்.28-

ஆம் ஆத்மியைச் சேர்ந்த ராகவ் சத்தா, ஹர்பஜன் சிங் உள்ளிட்ட 7 மாநிலங்களவை எம்.பி.க்கள் அண்மையில் அக்கட்சியில் இருந்து விலகி பாஜகவில் இணைந்தனர்.

இந்நிலையில், ஜலந்தரில் உள்ள ஹர்பஜன் சிங்கின் வீட்டில் பாதுகாப்புப் பணியில் இருந்த பஞ்சாப் மாநில போலீஸார் நேற்று முன்தினம் விலக்கிக் கொள்ளப்பட்டனர். மாநில போலீஸாரின் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்ட மறு



நாளே (நேற்று) மத்திய அரசின் சிஆர்பிஎப் படையினர் ஹர்பஜன் சிங் வீட்டில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பாஜகவில் இணைந்ததைத் தொடர்ந்து ஹர்பஜன் சிங்குக்கு மத்திய அரசின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. தினந்தோறும் அவரது வீட்டுக்கு 9 முதல் 10 சிஆர்பிஎப் வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனர். இதனிடையே, கட்சித் தாவிய எம்.பி.க்களை துரோகிகள் என பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் சிங் கடுமையாக விமர்சித்துள்ளார்

# முகத்தில் கேக் பூசிய தகராறில் 3 பேர் சுட்டுக்கொலை உ.பி.யில் பிறந்த நாள் விழாவில் விபரீதம்

புலந்த்சாகர், ஏப்.28-

உத்தர பிரதேசத்தில் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது, முகத்தில் கேக் பூசுவது தொடர்பாக ஏற்பட்ட தகராறில் 3 பேர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.உத்தர பிரதேச மாநிலம் புலந்த் சாகர் நகரின் குர்ஜா நகர் பகுதியில் சனிக்கிழமை இரவு ஜீது சைனி என்பவரின் பிறந்த நாள் விழா நடைபெற்றது. இந்த விழாவில், சைனியின் முகத்தில் அவரது நண்பர்கள் சிலர் கேக் பூசியதாகக் கூறப்படுகிறது. அப்போது இரு தரப்பினர் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. பின்னர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டதாகக் கூறப்படுகிறது.இது குறித்து புலந்த் சாஹர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அந்தரிக்ஷ் ஜெயின் கூறும்



போது, "துப்பாக்கிச் சூடு குறித்து தகவல் கிடைத்ததும் குர்ஜா நகர் போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த 3 இளைஞர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால், அவர்கள் ஏற்கெனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிவித்தனர்.தப்பி ஓடிய குற்றவாளிகளைக் கைது செய்ய 6 தனிப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. குற்றவாளிகளில் ஒருவரது பிறந்த நாளின் போது கேக் பூசியதால் ஏற்பட்ட தகராறே இந்த கொலைக்குக் காரணம் என்று குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். சில சந்தேக நபர்களை போலீஸார் காவலில் எடுத்து விசாரித்து வருகின்றனர்" என்றார்.

# தருவைகுளம் அருகே 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கடல்சார் புதை படிமங்கள் கண்டுபிடிப்பு

கோவில்பட்டி, ஏப்.28-

தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளம் அருகே கண்டெடுக்கப்பட்ட கடல் சார் புதை படிமங்கள் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என இந்திய விலங்கியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.மேலும் கீழக்கரை முதல் திருச்செந்தூர் வரையிலான கடற்கரை மண்டலத்தை 'பண்டைய கடல்சார் பாரம்பரிய மண்டலமாக' அறிவிக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

தருவைகுளம் அருகே பட்டினமருதூர், பனையூர் பகுதிகளில் பழமை வாய்ந்த செவ்வக வடிவிலான கிணறு,முதுமக்கள் தாழி, பழமையான ஓடுகள், இரும்புகள், பழங்கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன.இப்பகுதிகளில் நீர் மற்றும் நிலப்பரப்புக்கு கீழ் புதையல் மற்றும் கடல்வாழ் உயிரினங்களின் படிமங்கள் இருப்பதால் இந்திய விலங்கியல் மற்றும் புவியியல் துறை ஆய்வு நடத்த



வேண்டும்என கோரிக்கை எழுந்தது.இந்நிலையில், மத்திய விலங்கியல் ஆய்வு மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கடந்த ஜனவரி மாதம் பனையூர் பகுதியில் சுமார் 2 கி.மீ. தூரம் ஆய்வு செய்தனர். அப்போது சிறியஅளவிலான சிப்பிகள் உள்ளிட்டவற்றை சேகரித்து ஆய்வுக்கு கொண்டு சென்றனர்.

இதுதொடர்பாக இந்திய விலங்கியல் ஆய்வு மையம் தற்போது அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், பனையூர் கடற்கரை பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கடல்சார் புதைபடிமங்கள் 8 ஆயிரம் முதல் 12ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தூத்துக்குடியைச் சேர்ந்த வரலாறு மற்றும் தொல்லியல் ஆர்வலர் பெ.ராஜேஷ் செல்வரதி கூறியதாவது: பனையூரில் கண்டெடுக்கப்பட்ட சிப்பிகள் (Magallana) மற்றும் கிளிஞ்சல்கள் (Meretrix casta) போன்ற சிற்றினங்கள், அலைகளின் வேகம் குறைவாக உள்ள அமைதியான கடல் அல்லது முகத்துவாரச் சூழலில் மட்டுமே செழிக்க கூடிய வை.பனையூரில் தற்போதைய கடற்கரையிலிருந்து 5 முதல் 7 கி.மீ. உள்நோக்கி இந்த புதை படிமங்கள் கண்டறியப்பட்டிருப்பது, ஹோலோசீன் காலத்தில் கடல் மட்டம் உயர்ந்து ஆழமான வளைகுடாக்களை உருவாக்கி இருந்ததை நிரூபிக்கிறது.இந்த படுக்கைகளில் சிப்பிகள், கிளிஞ்சல்கள் போன்ற 100க்கும் மேற்பட்ட மாதிரிகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பனையூர் புதைபடிவப் படுக்கைகள் வெறும் ஓடுகளின் தொகுப்பு மட்டுமல்ல. அவை, சுமார் 8,000 முதல் 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஹோலோசீன் ஊழிக் காலத்தின் உயர்தர உயிரியல் ஆவணம் ஆகும் என விலங்கியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது பாண்டிய வம்சத்தின் வரலாறு மற்றும் மறைந்த நகரங்களான கபாடபுரம், தென் மதுரையை ஆய்வு செய்பவர்களுக்கு, இலக்கியங்களில் கூறப்படும் கடல் கோள் நிகழ்வுகளை உறுதிப்படுத்தும் புவியியல் சான்றாக அமைகிறது. கடந்த பல ஆயிரம் ஆண்டுகளாக இந்த உயிரினங்களின் உருவ அமைப்பில் மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதை இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது.

இது மன்னார் வளைகுடா உலகின் மிக நிலையான கடல் சூழலமைப்புகளில் ஒன்றாக இருந்ததைக் காட்டுகிறது. எனவே, கீழக்கரை முதல் திருச்செந்தூர் வரையிலான இந்த வரலாற்று மற்றும் அறிவியல் சிறப்புமிக்க கடற்கரை மண்டலத்தை 'பண்டைய கடல் சார் பாரம்பரிய மண்டலமாக' அறிவிக்க வேண்டும்.இந்த பாதுகாக்கப்பட்ட வளைகுடாக்களின் புவியியல் வரலாறு மற்றும் இந்தியாவின் கடல் சார் வளங்களில் அவற்றின் பங்கை விளக்கும் வகையில் தூத்துக்குடியில் தேசிய புவி பூங்கா அமைக்க வேண்டும்.

# மேற்கு வங்கத்தில் பைக்கில் செல்ல கட்டுப்பாடுகளில் மாற்றம்

கொல்கத்தா, ஏப்.28-

மேற்கு வங்கத்தில் 2ம் கட்ட தேர்தல் 29ம் தேதி நடைபெற உள்ளது. அப்போது பைக் பேரணிக்கு 48 மணி நேரம் தடை விதிக்கப்பட்டது. பைக்குகளில் ஒருவர் மட்டுமே பயணிக்க வேண்டும் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.இதற்கு எதிரான வழக்கை கொல்கத்தா உயர் நீதிமன்றம் விசாரித்தது. இவ்வழக்கில் நீதிபதி கிருஷ்ணா ராவ், பைக் கட்டுப்பாடுகளில் மாற்றங்கள் செய்து உத்தரவிட்டார். ''பைக்கில் ஒருவர் மட்டும் பயணிக்கும் உத்தரவு தேர்தல் நாளில் காலை 6 மணி முதல் மாலை 6 வரை மட்டுமே பொருந்தும். என்றாலும் வாக்களிக்க வருவதற்கும் பள்ளி, மருத்துவம், குடும்ப நிகழ்ச்சி போன்ற தேவைகளுக்கும் இந்த கட்டுப்பாடு பொருந்தாது. பைக் பேரணிக்கு 48 மணி நேர தடை உத்தரவில் எந்த மாற்றமும் இல்லை'' என்று அவர் உத்தரவிட்டார்.

# திமுகவினர் மீது நடவடிக்கை எடுக்க வேல்முருகன் கோரிக்கை



சென்னை: ஏப்.28-

நெய்வேலி, குறிஞ்சிப்பாடி ஆகிய தொகுதிகளில் கட்சியினர், பொதுமக்கள் மீது வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபட்ட திமுகவினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் அவசர மாநில செயற்குழு கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. பின்னர், நிருபர்களிடம் கட்சியின் நிறுவனத் தலைவர் தி.வேல்முருகன் கூறியதாவது: நடந்து முடிந்த தேர்தலில், தவாக சார்பில் நெய்வேலி தொகுதியில் திருமால் வளவன், குறிஞ்சிப்பாடி தொகுதியில் கண்ணன் ஆகியோரை வேட்பாளர்களாக நிறுத்தியிருந்தேன்.

2 தொகுதிகளிலும் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ள சூழ்நிலையில், திமுக தனது உளவுத்துறை மூலமாக தெரிந்துகொண்டு, இத்தொகுதிகளில் பல இடங்களில் வன்முறை வெறியாட்டங்களை நடத்தியுள்ளது. இதனால் வேட்பாளர்களும், தொண்டர்களும், பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இரவு 8 மணிக்கு மேல் பூத்களை கைப்பற்றி, வாக்களித்துள்ளனர். ஆனால், இதுவரை ஓர் இடத்தில் கூட குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. அதற்கு நேர்மாறாக, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மீது வழக்குப் பதிந்துள்ளனர்.

எனவே, நீதி கிடைக்கவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவும், அப்பாவிகள் மீது போடப்பட்ட வழக்குகளை ரத்து செய்யவும் வேண்டும்.

இந்திய தேர்தல் ஆணையம், தமிழக தேர்தல் ஆணையம், தமிழக காவல் துறை டிஜிபி, உள்துறை செயலர், உளவுத் துறை டிஜிபி ஆகியோர் எனக்கு நீதி வழங்க வேண்டும். எங்கள் கட்சி தொண்டர்கள், ஆதரவளித்தவர்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கு எதிராக நீதி கேட்கும் நடவடிக்கையில் விரைவில் ஈடுபடுவேன். இவ்வாறு அவர் கூறினார்.

# மானாமதுரை சித்திரை திருவிழாவில் கடை வாடகை வசூல்: சட்டபூர்வமா என்ற கேள்வி எழுகிறது





மானாமதுரை ஏப். 28-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை ஆற்றில் ஆண்டுதோறும் நடைபெறும் சித்திரை திருவிழாவை முன்னிட்டு தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டு, நகராட்சி நிர்வாகம் மூலம் வாடகை வசூல் செய்யப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால், இந்த வசூல் சட்டபூர்வமானதா என்ற கேள்வி தற்போது பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் மத்தியில் எழுந்துள்ளது.வைகை ஆற்றுப்பகுதி பொதுவாக பொதுப்பணி துறை கட்டுப்பாட்டில் உள்ள பகுதியாகும். இத்தகைய இடங்களில் தற்காலிக கடைகள் அமைத்தல், இடம் ஒதுக்குதல் மற்றும் வாடகை வசூல் செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்பது விதிமுறையாகும். ஆனால், மானாமதுரை சித்திரை திருவிழாவில் நகராட்சி நிர்வாகம் வசூல் செய்யும் கட்டணத்திற்கு பொதுப்பணி துறை அல்லது மாவட்ட நிர்வாகத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பது குறித்து தெளிவான தகவல் வெளியாகவில்லை. இதனால், “விழா காலங்களில் மட்டும் என்ற பெயரில் நகராட்சி நிர்வாகம் கட்டணம் வசூலிப்பது விதிமுறைகளுக்கு உட்பட்டதா?” என்ற சந்தேகம் எழுந்துள்ளது. உரிய அனுமதி இல்லாமல் வசூல் செய்யப்பட்டால் அது நிர்வாக விதிமுறை மீறலாக கருதப்படும் என பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். எனவே, மானாமதுரை சித்திரை திருவிழாவில் நடைபெறும் இந்த வசூல் தொடர்பாக அதிகாரிகள் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும், விதிமுறைகளுக்கு புறம்பாக ஏதேனும் நடந்து இருந்தால் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



■ திருப்பூர் மாவட்டத்தில் 15 வேலம்பாளையம். அஇஅதிமுக தலைவர் மணி 15 வேலம்பாளையம் நகரத்தில். ஒன்றாவது மண்டலம் 15 வார்டுகளைக் கொண்டது. அனைத்து வார்டு தொகுதிகளையும். சென்று ஆராய்ந்து. ஓட்டுக்கள் எத்தனை சதவீதம் விழுந்தது என்று பார்க்க நேரடியாக சென்றார். 15 வேலம்பாளையம் ஆ இ அ திமுக. வி கே பி மணி எல்லா பூத் கமிட்டிகளையும் சென்று ஆராய்ந்து வந்தார்.



# மேற்கு வங்கத்தில் 2ம் கட்ட வாக்குப் பதிவுக்கு பலத்த பாதுகாப்பு

## தேர்தல் ஆணையம் அதிரடி நடவடிக்கை

கொல்கத்தா, ஏப்.28-

மேற்கு வங்க மாநிலத்தில் ஏப்ரல் 29ம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 142 தொகுதிகளின் தயார்நிலை, பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கொல்கத்தாவிற்கு உட்பட்ட மூன்று தேர்தல் மாவட்டங்களின் மூத்த காவல் துறை அதிகாரிகள் மற்றும் மத்தியப் படைத் தளபதிகள் பங்கேற்ற உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தேர்தல் அதிகாரி ஒருவர் கூறியதாவது: தேர்தல் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 160 மோட்டார் சைக்கிள்களில் தலா இரண்டு மத்திய ஆயுதக் காவல் படை வீரர்கள் தொகுதி முழுவதும் ரோந்துப் பணியில் ஈடுபடுவர். இதன் மூலம் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும்.

பதற்றமான வாக்குச்சாவடிகளைக் கண்டறிதல், சிவில் மற்றும் காவல்துறை நிர்வாகத்திற்கு இடையிலான தகவல் தொடர்பை வலுப்படுத்துதல் மற்றும் அனைத்துப் பகுதிகளிலும் பாதுகாப்புப் படையினரின் நடமாட்டத்தை உறுதி செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

தெற்கு 24 பர்கனாஸ் மாவட்டத்தின் காக்ட்வீப் பகுதிக்குச் சென்ற மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரி மனோஜ் குமார் அகர்வால், அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், ‘‘அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெறுவதை அனைவரும் உறுதி செய்ய வேண்டும். கள்ள ஓட்டு போடுவது அல்லது வாக்குச்சாவடியைக் கைப்பற்றுவது போன்ற செயல்கள் ஒருபோதும் அனுமதிக்கப்படாது.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படும். வாக்குச்சாவடிகளில் மத்தியப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவர். வாக்குச்சாவடியைச் சுற்றி 100 மீட்டர் தொலைவிற்குள் தேவையற்ற நபர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். வாக்காளர்கள் அச்சமின்றி வந்து தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும்’’ என்றார்.

# புதினுடனான சந்திப்பு போர் நிறுத்தம் பற்றி ஆலோசிக்க நல்ல வாய்ப்பு: ஈரான்



” தெஹ்ரான், ஏப்.28-

அமெரிக்கா ரஷ்யா இடையிலான பேச்சுவார்த்தை மற்றும் சமாதான முயற்சிகள் ஊசலாடிக்கொண்டிருக்கும் நிலையில், ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி ரஷ்ய அதிபர் புதினை சந்திக்கவுள்ளார்.

பேச்சுவார்த்தை தொடர்பாக பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திற்குச் சென்று வந்த அப்பாஸ் அராக்சி ஓமானுக்கும் சென்றார். இந்தச் சூழலில், அவர் இன்று (ஏப்ரல் 27) ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுவதாக ஈரான் தூதர் தெரிவித்துள்ளார்.“போர் நிலவரங்கள் குறித்து விவாதிக்க விளாடிமிர் புதினுடனான சந்திப்பு ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்,” என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி கூறியதாக ஐஆர்என்ஏ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.பாகிஸ்தான் மத்தியஸ் தர்கள் மூலமாக ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறப்பது மற்றும் போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக ஒரு புதிய முன்மொழிவை ரஷ்யா அமெரிக்காவிடம் வழங்கியது. இதுகுறித்து அமெரிக்கா முடிவெடுக்காததால் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது.ஈரானின் உயர்மட்ட தூதர் பாகிஸ்தானை விட்டு வெளியேறியதாலும், பாகிஸ்தானுக்கு செல்ல வேண்டாம் என்று அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறியதை அடுத்து அமெரிக்க தூதர்கள் வராதத ாலும், அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை முயற்சிகள் தோல்வியடைந்தன. இதுபற்றி பேசிய ட்ரம்ப்," வெறுமனே உட்கார்ந்து அர்த்தமற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை. ஆனாலும் போர் உடனடியாக மீண்டும் தொடங்காது” என்று குறிப்பிட்டார். இதனையடுத்து பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப், ஈரான் அதிபர் மசூத் பெஷெஷ்கியனுடன் தொலைபேசியில் பேசி, மாறிவரும் பிராந்திய சூழல் குறித்து விவாதித்தார்.

ஐம்பது நிமிடங்கள் நீடித்த அவர்களின் உரையாடலின் போது, தற்போதைய பிராந்திய நிலைமை மற்றும் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கான தற்போதைய முயற்சிகள் குறித்து இரு தலைவர்களும் விரிவான கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டனர் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்தது

# “பாஜகவை மேற்கு வங்க மக்கள் பழிவாங்குவர்” கொல்கத்தாவில் கேஜ்ரிவால் கருத்து



புதுடெல்லி, ஏப்.28-

“எஸ்ஐஆர் (SIR) செயல்முறையின் போது, மேற்கு வங்கத்தில் இருந்து 90 லட்சம் வாக்குகளை நீக்கியதற்காக, பாஜகவை மக்கள் பழிவாங்குவார்கள்” என ஆம் ஆத்மி கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கேஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.மேற்கு வங்கத்தில் தேர்தல் களம் தீவிரமடைந்துள்ளது. தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவு ஏப்ரல் 29ஆம் தேதி நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை மே 4ஆம் தேதி நடைபெறும். தேர்தலின் முதல் கட்டத்தில் 93.2% வாக்குப் பதிவு பதிவாகியுள்ளது.

இந்நிலையில், கொல்கத்தாவில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசிய அரவிந்த் கேஜ்ரிவால், “நடைபெறவிருக்கும் தேர்தலில் வெற்றி பெற மம்தா பானர்ஜிக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சர்வாதிகாரத்துக்கு எதிராக மேற்கு வங்க மக்கள் போராடி வரும் விதத்துக்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். கடந்த இரண்டு நாட்களில் மாநிலத்தில் நான் கண்ட சூழலைப் பார்க்கும்போது, எஸ்ஐஆர் (SIR) செயல்முறையின் போது, மேற்கு வங்கத்தில் இருந்து 90 லட்சம் வாக்குகளை நீக்கியதற்காக, பாஜகவை மக்கள் பழிவாங்குவார்கள் என்று தோன்றுகிறது” என்று பேசினார்.இதனிடையே மம்தா பானர்ஜி தனது எக்ஸ் தளத்தில், “நேற்று நடைபெற்ற பாதயாத்திரை மற்றும் மக்கள் சபை கூட்டங்களில் மக்கள் வெளிப்படுத்திய உற்சாகம், உண்மையான அன்பு ஆகியவை வார்த்தைகளால் விவரிக்க முடியாத வகையில் என்னை நெகிழச் செய்துள்ளன” என்று குறிப்பிட்டுள்ளார்.மேலும், மேற்கு வங்கம் நீண்ட காலமாகவே நல்லிணக்கத்தின் கலங்கரை விளக்கமாகவும், நாகரிகப் பெருமையின் அடையாளமாகவும் திகழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# விருதுநகர் பட்டாசு ஆலை விபத்து: ரூ.20 லட்சம் இழப்பீடு கோரிய வழக்கு; ஐகோர்ட் கிளை ஒத்திவைப்பு



மதுரை, ஏப்.28-

விருதுநகர் பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ரூ.20 லட்சத்திற்கும் குறையாமல் இழப்பீடு வழங்க கோரிய வழக்கை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்தது. விருதுநகரை சேர்ந்த விடியல் வீர பெருமாள் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில்: “சிவகாசியில் கடந்த 19ம் தேதி நடைபெற்ற தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு 20 லட்ச ரூபாய்க்கு குறையாமல் இழப்பீடு வழங்க வேண்டும். 50 சதவீதம் தீக்காயம் அடைந்தவர்களுக்கு 15 லட்சம் ரூபாயையும், 25 50 சதவீதம் தீக்காயம் அடைந்தவர்களுக்கு 10 லட்சம் ரூபாயும், 525 சதவீதம் தீக்காயம் அடைந்தவர்களுக்கு 5 லட்சம் ரூபாயும், இழப்பீடாக வழங்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு கல்வி உள்ளிட்ட மறுவாழ்வு வசதிகளை செய்து தரவும், விருதுநகர் பட்டாசு ஆலை விபத்தை தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கவும், விருதுநகர் மாவட்ட பட்டாசு ஆலைகளை குறிப்பிட்ட இடைவெளிகளில் முறையாக ஆய்வு செய்து விதிகள் மீறுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும்.” எனக் கூறியிருந்தார்.இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வு, "ஒரே கோரிக்கைக்காக பல மனுக்கள் தாக்கல் செய்வது தேவையற்றது. இது சில நேரங்களில் சிலர் விளம்பரத்திற்காக பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பாகி விடுகிறது என அறிவுறுத்தி, பட்டாசு ஆலை விபத்து தொடர்பான வழக்கோடு இந்த வழக்கையும் சேர்த்து பட்டியலிட உத்தரவிட்டு வழக்கை ஜூன் 8ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# அரசு நிதி வீணடிப்பு - சிவகங்கை அருகே பயன்பாடற்ற ஆழ்துளை கிணறு: ஒப்பந்ததாரரின் அலட்சியத்தால் பொதுமக்கள் அவதி






சிவகங்கை ஏப்.28-

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், புளியால் ஊராட்சிக்குட்பட்ட மைக்கேல் பட்டி கிராமத்தில், அரசு நிதி முறையாகப் பயன்படுத்தப்படாமல் மக்கள் ஏமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளனர். இப்பகுதியில் வசிக்கும் கிருஸ்துவ ஆதிதிராவிட மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்பட்ட பணிகள் தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவம் என்ன? 2024 2025ஆம் ஆண்டுக்கான 15வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ், சுமார் 8,46,025 ரூபாய் மதிப்பீட்டில் இந்தப் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு (Bore-well) அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. பணி நிறைவடைந்து தற்போது மின் மோட்டார் இயக்கப்படும் நிலையில், அதிலிருந்து குடிநீர் வருவதற்குப் பதிலாக வெறும் காற்றே வெளிவருவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

ஒப்பந்ததாரரின் மெத்தனப் போக்கு இது குறித்து அந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரான சோலை என்பவரிடம் முறையிட்டுள்ளனர். முறையான ஆய்வு இன்றி ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டதால் மக்கள் பணம் வீணடிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த ஒப்பந்ததாரர், உரிய விளக்கம் அளிக்காமல், "உங்களால் முடிந்ததைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என ஏளனமாகப் பேசியதாக அப்பகுதி மக்கள் மிகுந்த வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

கோரிக்கைகள்: ஆட்சியர் ஆய்வு: எட்டு லட்சத்திற்கும் அதிகமான அரசு பணம் செலவிடப்பட்டும், சொட்டுத் தண்ணீர் கூட கிடைக்காத இந்தத் திட்டத்தை சிவகங்கை மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு செய்ய வேண்டும். நடவடிக்கை: பணிகளை முறையாகச் செய்யாத ஒப்பந்ததாரர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மாற்று ஏற்பாடு: கோடை காலம் நெருங்கி வரும் நிலையில், மைக்கேல் பட்டி கிராம மக்களுக்கு உடனடியாக தரமான குடிநீர் கிடைக்க மாற்று ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டும். பொதுமக்கள் கருத்து: "அரசு நிதி என்பது மக்களின் வரிப்பணம். அது தகுந்த முறையில் மக்களுக்குப் பயன்பட வேண்டும். அதிகாரிகளும், ஒப்பந்ததாரரும் இணைந்து செயல்பட்டு நிதியை வீணடிப்பதை மாவட்ட ஆட்சியர் தடுத்து நிறுத்த வேண்டும்."

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161